**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**உயர்பட்டப்படிப்புகள் பீடம்**

# புதிய அனுமதிகள்

## <u>கல்வியியல் முதுமாணி (Master of Education) 2025/26 (அணி XVI) - யாழ்ப்பாண நிலையம்</u>

மேற்படி சுயநிதிக்கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் பாடசாலையில் அல்லது யாதேனும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் கற்பித்தல் அனுபவம் அல்லது மேற்படி கற்கைநெறிக்குப் பொருத்தமான கல்விசார் பணிகளில் அனுபவம் உள்ளவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்குரிய தகைமைகள்:**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் பட்டமும், பட்டப்பின் கல்விடிப்ளோமாவும்

**அல்லது**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் கல்விமாணிப் பட்டம்

**தெரிவுமுறைமை:**

- எழுத்துத் தேர்வும், நேர்முகத் தேர்வும்
  (எழுத்துத் தேர்வு கல்விசார் பொதுத் தகைமையைப் பரீட்சிப்பதாக அமையும்)

**கற்கைக் காலம்** : ஒரு வருடம்

**மொழி மூலம்** : தமிழ் / ஆங்கிலம்

**கற்கைநெறிக் கட்டணம்** : 205,000/- (5000/- மீள அளிக்கப்படும்)

**விண்ணப்பப்படிவக் கட்டணம்** : 1,000/-

**விண்ணப்ப முடிவுத்திகதி : 25/01/2026**

**<u>விண்ணப்பப்படிவம் பெறும் முறை:</u>**

1. மக்கள்வங்கியின் ஏதாவதொரு கிளையில் பணம் வைப்பிலிடும் வைப்புச்சீட்டில் **குறிப்பு இல.190162500001951**ன் மூலம் 162100310000891 என்னும் சேகரிப்பு கணக்கு இலக்கத்திற்கு விண்ணப்பத்திற்கான ரூபா 1000/- கட்டணத்தைச் செலுத்திய பின் வைப்புச்சீட்டை உயர்பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப்படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
2. வலைத்தளம் மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் மக்கள் வங்கியில் **(190162500001951)** என்னும் குறிப்பு இலக்கத்திற்கு **ரூபா 1000/-** செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

**<u>விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் முறை:</u>**

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **கற்கைநெறியின் பெயரினைக் குறிப்பிட்டு** பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் **25/01/2026** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு சிரேஷ்ட உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**